©
தமிழ்நாடு அரசு
2013

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[விலை : ரூ. 1.60 காசு

# தமிழ்நாடு அரசிதழ்

ஆணையின்படி வெளியிடப்பட்டது.

எண் 38] சென்னை, புதன்கிழமை, செப்டம்பர் 25, 2013
புரட்டாசி 9, விஜய, திருவள்ளுவர் ஆண்டு–2044

## பகுதி II—பிரிவு 2 இன் இணைப்பு

## அரசாங்க அறிவிப்புகளின் தமிழ் மொழிபெயர்ப்புகள்

### சுற்றுச் சூழல் மற்றும் வனத் துறை

**அறிவிக்கை.**

*[அரசாணை (நிலை) எண் 59, சுற்றுச் சூழல்—வனங்கள் (FR.5) துறை, 26 ஏப்ரல் 2013.]*

1972 ஆம் ஆண்டு வனவிலங்குகள் (பாதுகாப்புச்) சட்டத்தின் (மத்தியச் சட்டம் 53/1972) 26ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதியில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், கீழே விவர அட்டவணையில் குறிப்பிடப்பட்ட பகுதிகளை, அப்பகுதியில் வளரும் தாவரங்களையும், வாழும் விலங்கினங்களையும், பாதுகாத்து, புதிதாக உருவாக்கி, மேம்படுத்தும் நோக்கத்திற்காக, அப்பகுதிகளையும் மேற்சொன்ன பகுதியில் உள்ள அதன் சுற்றுப்புறத்தையும் காப்பிடமாகவும், இந்த அறிவிக்கை வெளியிடப்படும் நாளிலிருந்தும், அந்நாள் முதற்கொண்டும் இப்பகுதி கோடியக்கரை வனவிலங்கு காப்பிடம் வட்டாரம் A மற்றும் வட்டாரம் B என்று அழைக்கப்பட வேண்டுமென்றும் இதனால் அறிவிக்கிறார்.

**விவர அட்டவணை—வட்டாரம் – A.**

| | |
|---|---|
| மாவட்டங்களின் பெயர்: | (1) தஞ்சாவூர் மாவட்டம் |
| | (2) திருவாரூர் மாவட்டம் |
| வட்டங்களின் பெயர்: | (1) பட்டுக்கோட்டை |
| | (2) திருத்துறைப்பூண்டி |
| வனவிலங்கு சரணாலயத்தின் பெயர்: | கோடிக்கரை வனவிலங்கு சரணாலயம் வட்டாரம்: A. |

**பரப்பளவு – 11885.91 ஹெக்டேர்.**

| | பரப்பளவு (ஹெக்டேரில்) | மாவட்டம் மற்றும் வட்டத்தின் பெயர் |
|---|---|---|
| முத்துப்பேட்டை காப்புவனம் | 6803.01 | திருவாரூர் மாவட்டம் |
| துறைக்காடு காப்புவனம் | 2501.72 | திருத்துறைப்பூண்டி வட்டம் |
| வடக்காடு காப்புவனம் | 320.28 | தஞ்சாவூர் மாவட்டம் |
| வடக்காடு காப்புவனம் வட்டாரம்—II | 51.78 | பட்டுக்கோட்டை வட்டம் |
| மறவக்காடு காப்புவனம் | 1356.07 | |
| மறவக்காடு விரிவாக்கப்பட்ட காப்புவனம் | 134.05 | |
| தாமரன்கோட்டை காப்புவனம் | 529.66 | |
| பழந்தர் காப்புவனம் துண்டு 1 | 171.995 | |
| பழஞ்சூர் காப்புவனம் துண்டு 2 | 17.345 | |
| மொத்தம் | 11885.91 | ஹெக்டேர் |

***வடக்கு:*** இவ்வன வட்டாரத்தின் எல்லையானது. எண் 168, பழஞ்சூர் கிராமத்தின் நில அளவை எண்கள் 546, 547 மற்றும் 552 சந்திக்கும் முச்சந்திப்புப் புள்ளியில் தொடங்கி, இவ்வெல்லையானது பழஞ்சூர் கிராமத்தின் நில அளவை எண்கள் 547, 548, 549, 550 மற்றும் 551—இன் கிழக்குப்பக்கத்தில் தெற்குப்பக்கம் நெடுக சென்று கிராம எண் 105, தாமரன்கோட்டை கிராமத்தின் நில அளவை எண் 954ன் தென்மேற்கு மூலையில் சந்திக்கிறது. இந்த 186, பழஞ்சூர் கிராமத்தின் நில அளவை எண் 529ம், தாமரன்கோட்டை கிராமத்தின் நில அளவை எண் 964 ஆகிய இரண்டு சந்திக்கும் இடங்கள், நிலபுல எண்கள் 964, 965, 966, 968 மற்றும் 968 கிழக்குப் பக்கத்தில் தெற்குப் பக்கமாகவும், நில புல எண்கள் 969ன் மேற்கு மற்றும் தெற்கு பக்கங்களில் சென்று (அனைத்தும் தாமரன்கோட்டை கிராமம்) பின்னர் நிலபுல எண்கள் 969இன் தென் கிழக்கு பக்கம் சென்று தாமரன்கோட்டை கிராமத்தின் நில புல எண் 969ன் மற்றும் டி. மரவன்காடு கிராமத்தின் நில புல எண்கள் 116/71 ஆகிய இரு இடங்களிலும் சந்திக்கின்றன. அங்கிருந்து டி. மரவன்காடு கிராமத்தின் நில புல எண்கள் 103/71—வடமேற்கு மூலைக்கும், மரவங்காடு கிராமத்தின் நிலபுல எண்கள் 111/71—ன் கிழக்கு பக்கம் நெடுகச் சென்று, மேற்சொன்ன டி. மரவன்காடு கிராமத்தின் நிலபுல எண்கள் 111,109 மற்றும் 103 இன் முச்சந்திப்பில் சந்திக்கிறது. பின்னர், நிலபுல எண்கள் 103இன் கிழக்குப் பக்கத்தில் தெற்கு பக்கமாகவும், நிலபுல எண்கள் 359, 3360 மற்றும் 373இன் மேற்கு பக்கமாகவும் மேற்சொன்ன டி. மரவங்காடு கிராமத்தைச் சேர்ந்த நிலபுல எண்கள் 374இன் மேற்கு மற்றும் தெற்கு பக்கமாகவும், நிலபுல எண்கள் 375, 376, 377, 378, 379, 390, 401, 402, 403, 404, 447, 450, 453, 454, 486, 487 மற்றும் 490 இன் தெற்கு பக்கமாகச் சென்று டி. மரவங்காடு கிராமத்தின் நில புல எண்கள் 490/71, கிராம எண் 75, டி. மரவங்காடு 7/83 ஆகியவை சந்திக்கும் முச்சந்திப்பு புள்ளியை அடைகிறது. பின்னர் டி. வடகாடு கிராமத்தின் நில அளவை எண் 317/83, புதுக்கோட்டை வட்டத்தின், புதுகோட்டகம் கிராமத்தின் நிலபுல எண் 212/74, திருத்துறைப்பூண்டி வட்டத்தின் துறைக்காடு கிராம நில புல எண் 351/135 ஆகியவற்றின் முச்சந்திப்புக்கு, நில அளவை எண் 317—ன் கிழக்குப்பக்கத்தில் தெற்கு பக்கமாகச் சென்று, பின்னர், இவ்வெல்லையானது, துறைக்காடு கிராமத்தின் நில அளவை எண்கள் 478, 479, 480/82—ன் எல்லைகளின் மேற்கு பக்கம் நெடுகச் சென்று, பின்னர் இவ்வெல்லையானது 82 துறைக்காடு கிராமத்தைச் சேர்ந்த 480, 474, 473, 467, 466, 459, 458, 457, 450, 449, 351, 443, 436, 435, 350, 432, 431 மற்றும் 348—ன் தெற்கு எல்லை நெடுக சென்று பின்னர் நில அளவை எண் 348—ன் எல்லையின் வடக்கு பக்கத்தில் கிழக்கு பக்கமாகச்சென்று நிலஅளவை எண் 347—ன் மேற்கு எல்லை நெடுக சென்று, முத்துப்பேட்டை கிராமத்தின் 346/79இன் கிழக்கு எல்லையானது எண் 74, புதுக்கோட்டகம் கிராமம் எண் 79, முத்துப்பேட்டை, துறைக்காடு கிராமத்தின் நில அளவை எண்கள் 347/135 ஆகியவற்றின் முச்சந்திப்பில் நில அளவை எண் 346—இன் தென்கிழக்கு மூலைவரை சென்று சந்திக்கிறது. பின்னர் இது 151 $^{\circ}$ காந்தக்கோணத்தின் தியோடோலைட்டின் 6 லிங்குகள் வரை இப்பகுதி செல்கிறது. (இது சத்திரத்திற்கும், அரசு காப்புவனத்திற்கும் இடையே பொதுவான எல்லையில் தியோடோலைட் கல்லும் உள்ளது. மற்றும் 10—11—1894ஆம் நாளிட்ட திரு. தான்ஹில்ஸ்—ன் தீர்மானம் எண் 1 இல் ‘B’ பகுதியாக குறிப்பிடப்பட்டுள்ளது) இவ்வெல்லையானது, அமைவிடம் எண் 2—க்கு தொடக்கப்புள்ளியிலிருந்து 500 லிங்குகள் தொலைவிலுள்ள புள்ளிக்கும், 134.5 $^{\circ}$ காந்தக்கோணத்திற்குச் சென்று, அங்கிருந்து பின்வரும் திசைநிலைகளையும், தொலைவையும் சென்றடைகிறது.

| *எந்த நிலையத்திலிருந்து* | *எந்த நிலையம் வரையில்* | *காந்த கோணங்கள்* | *தொலைவு (லிங்குகளில்)* |
|---|---|---|---|
| 2 | 3 | 90.50 | 2570 |
| 3 | 4 | 104.75 | 1242 |
| 4 | 5 | 101.75 | 1834 |
| 5 | 6 | 91.75 | 2347 |
| 6 | 7 | 102.20 | 1767 |
| 7 | 8 | 121.75 | 1767 |
| 8 | 9 | 110.75 | 2116 |
| 9 | 10 | 111.25 | 4612 |
| 10 | 11 | 110.00 | 4268 |

| *எந்த நிலையத்திலிருந்து* | *எந்த நிலையம் வரையில்* | *காந்த கோணங்கள்* | *தொலைவு (லிங்குகளில்)* |
|---|---|---|---|
| 11 | 12 | 95.75 | 3396 |
| 12 | 13 | 93.00 | 300 |
| 13 | 14 | 93 | 2503 |
| 14 | 15 | 95.00 | 2574 |
| 15 | 16 | 95.75 | 2905 |
| 16 | 17 | 105.50 | 4453 |
| 17 | 18 | 105.50 | 3496 |
| 18 | 19 | 105.50 | 4761 |
| 19 | 20 | 195.50 | 3974 |
| 20 | 21 | 105.50 | 3716 |
| 21 | 22 | 106.0 | 3055 |
| 22 | 31 | 134.00 | 9164 |

***கிழக்கு:*** பின்னர் நிலையம் 31–லிருந்து 32 வரையில் இந்த எல்லைக்கோடு, பாக்ஜலசந்தியை அடையும் வரையில் 204.5–இல் 2260 லிங்குகள் நீளத்திற்கு தெற்கு நோக்கி செல்கிறது.

***தெற்கு:*** இந்த எல்லைக்கோடு, பழஞ்சூர் துண்டுப்பகுதி–2 காப்பு வனத்தின் தென்மேற்கு மூலையை அடையும் வரையில் பாக்ஜலசந்தியின் கரையோரம் நெடுக செல்கிறது. இது, பாக்ஜலசந்திக்கும் பழஞ்சூர் கிராமத்தின் நி.அ.பு. எண் 556–க்குமான சந்திப்பு முனையாகும்.

***மேற்கு:*** பின்னர் இந்த எல்லைக்கோடு பழஞ்சூர் கிராமத்தின் 556ஆம் எண் நி.அ. புலத்தின் மேற்கு எல்லைக்கோடு நெடுக 366.8 மீட்டர் நீளத்திற்கும் பழஞ்சூர் கிராமத்தின் 558, 557ஆம் எண்களின் நி.அ.புலங்களின் முச்சந்திப்பினை அடைவதற்கு பொதுவாக வடக்கு நோக்கி செல்கிறது. பின்னர் இந்த எல்லைக்கோடு 557ஆம் எண் நி.ஆ. புலத்திற்கு சென்று பழஞ்சூர் கிராமத்தின் 557, 529 மற்றும் 552 ஆம் எண்களுள்ள நி.அ. புலத்தின் முச்சந்திப்பினை சென்றடைகிறது. பின்னர் இந்த எல்லைக்கோடு தொடங்கிய இடத்தை அடையும் வரையில் 552 ஆம் எண் நி.அ. புலத்தின் தெற்கு, கிழக்கு மற்றும் வடக்கு பக்கங்கள் நெடுக செல்கிறது.

வட்டாரம் B-க்கான விவர அட்டவணை

| | | |
|---|---|---|
| மாவட்டத்தின் பெயர் | : | நாகப்பட்டினம் |
| வட்டத்தின் பெயர் | : | வேதாரண்யம் |
| வனவிலங்கு சரணாலயத்தின் பெயர் | : | கோடியக்கரை வனவிலங்கு சரணாலயம் வட்டாரம்–B |
| பரப்பளவு | : | 521.36 ஹெக்டேர். |

| *வ. எண்* | | *பரப்பளவு (ஹெக்டேரில்)* | *மாவட்டம் மற்றும் வட்டத்தின் பெயர்* |
|---|---|---|---|
| 1 | கோடியக்காடு விரிவாக்கம் துண்டுப்பகுதி IV | 10.17 | நாகப்பட்டினம் மாவட்டம். |
| 2 | கோடியக்காடு விரிவாக்கம் துண்டுப்பகுதி V | 184.00 | வேதாரண்யம் வட்டம் |
| 3 | கோடியக்காடு காப்புவனம் | 327.19 | |
| | மொத்தம் | **521.36** | |

***நாற்புற எல்லைகள்***

I. **கோடியக்காடு விரிவாக்கம் துண்டுப்பகுதி IV–இன் நாற்புற எல்லை பற்றிய விவரங்கள்:—**

*வடக்கு:* 65A–1a, 65A–1B ஆம் எண்களுள்ள நில அளவை புலங்கள் மற்றும் கோடியக்கரை காப்பு வனத்தின் முச்சந்திப்பில் இருந்து தொடங்கி, கோடியக்கரை காப்பு வனத்தின் தெற்கு எல்லை நெடுக 1000 லிங்குகள் நீளத்திற்கு கிழக்காக சென்று 372, 373 மற்றும் 6A–1B ஆம் எண்களுள்ள நி.அ. புலங்களின் முச்சந்திப்பை அடைகிறது (இவையனைத்தும் எண் 133, கோடியக்கரை கிராமத்தைச் சேர்ந்தவை)

*கிழக்கு:* பின்னர், இந்த எல்லைக்கோடு, தென்மேற்கு நோக்கிச்சென்று, 373, 374 மற்றும் 375 ஆம் எண்களுள்ள நி.அ. புலங்களின் மேற்கு பக்கத்திலுள்ள இருப்புப்பாதையை அடைந்து 375, 42 மற்றும் 65A–1B ஆம் எண்களுள்ள நி.அ. புலங்களின் முச்சந்திப்பை அடைகிறது (இவையனைத்தும் எண் 138, கோடியக்காடு கிராமத்தைச் சேர்ந்தவை.)

*தெற்கு:* பின்னர், இந்த எல்லைக்கோடு மேற்கு எல்லை நெடுக 144 லிங்குகள் நீளத்திற்கு கிழக்காகவும் சென்று, 41 42 மற்றும் 65A–1B ஆம் எண்களுள்ள நி. அ. புலங்களின் முச்சந்திப்பை அடைகிறது. (இவையனைத்தும் எண் 133, கோடியக்காடு கிராமத்தை சேர்ந்தவை)

*மேற்கு:* பின்னர் இந்த எல்லைக்கோடு, 65A–1 A, 65A–1B மற்றும் 41 ஆம் எண்களுள்ள நி.அ.புலங்களின் முச்சந்திப்பை அடைவதற்காக (இவையனைத்தும் எண் 133, கோடியக்கரை கிராமத்தைச் சேர்ந்தவரை) 41 ஆம் எண்ணுள்ள நி.அ. புலத்தின் கிழக்கு மற்றும் வடக்கு பக்கங்கள் நெடுக. வடக்கு நோக்கி சென்று, அதன்பின்னர், 2050 லிங்குகள் நீளத்திற்கு 65A–1 ஆம் எண்ணுள்ள நி.அ. புலத்தின் கிழக்கு பக்கம் நெடுக சென்று தொடக்க இடத்தை சென்றடைகிறது.

**II. கோடியக்காடு விரிவாக்க துண்டுப்பகுதி V இன் நாற்புற எல்லைகள் பற்றிய விவரம்**

*வடக்கு மற்றும் கிழக்கு:*

133 ஆம் எண் கோடியக்காடு கிராமத்தின் 372, 373 மற்றும் 65B–1 ஆம் எண்ணுள்ள நி.அ.புலங்களின் முச்சந்திப்பின் வடமேற்கு மூலையிலிருந்து தொடங்கி, கோடியக்கரை காப்பு வனத்தின் (தமிழ்நாடு 1882 ஆம் ஆண்டு வனச்சட்டத்தின் 16 ஆம் பிரிவின் கீழ், 4–5–1982 ஆம் நாளிட்ட 188 ஆம் எண் அறிவிக்கையில் அறிவிக்கையிடப்பட்டது) தெற்கு எல்லை நெடுக 4296 லிங்குகள் நீளத்திற்கு கிழக்காகவும், கோடியக்கரை காப்புவன எல்லையின் மேற்குப்பக்கம் நெடுக 9543 லிங்குகள் நீளத்திற்கு தெற்காகவும் சென்று, 65B–1, 223 மற்றும் 224 ஆம் எண்களுள்ள நி.அ. புலங்களின் முச்சந்திப்பை அடைகிறது. (இவையனைத்தும் எண் 133, கோடியக்காடு கிராமத்தைச்சேர்ந்தவை)

*தெற்கு:*

பின்னர், இந்த எல்லைக்கோடு, மேற்கு நோக்கிச் சென்று 223, 222, 195, 183 மற்றும் 170 ஆம் எண்களுக்கு நி.அ. புலங்களின் வடக்குப்பக்கம் நெடுகச்சென்று, 169, 170 மற்றும் 65 B–1 ஆம் எண்களுள்ள நி.அ. புலங்களின் முச்சந்திப்பை அடைகிறது. (இவையனைத்தும் எண் 133, கோடியக்காடு கிராமத்தைச் சேர்ந்தவை)

*மேற்கு:*

69 ஆம் எண்ணுள்ள நி.அ. புலத்தின் கிழக்குப் பக்கம், 149 ஆம் எண்ணுள்ள நி.அ. புலத்தின் கிழக்கு பக்கத்தின் ஒரு பகுதி, 65–B–3 ஆம் எண்ணுள்ள நி.அ. புலத்தின் தெற்கு, கிழக்கு மற்றும் வடக்குப்பக்கம், 149 ஆம் எண்ணுள்ள நி.அ. புலத்தின் கிழக்குப்பக்கத்தின் ஒரு பகுதி ஆகியவை நெடுகப் பொதுவாக வடக்கு நோக்கிச் சென்று, 65–B–1, 149 மற்றும் 56 ஆம் எண்களுள்ள நி.அ. புலங்களின் முச்சந்திப்பை அடைகிறது. (இவையனைத்தும் எண் 133 கோடியக்காடு கிராமத்தைச் சேர்ந்தவை) பின்னர், இந்த எல்லைக்கோடு, 56 ஆம் எண்ணுள்ள நி.அ. புலத்தின் தெற்கு மற்றும் கிழக்குப் பக்கங்கள் 52 ஆம் எண்ணுள்ள நி.அ. புலத்தின் தெற்குப்பக்கங்கள், 51 ஆம் எண்ணுள்ள நி.அ. புலத்தின் தெற்கு மற்றும் கிழக்குப் பக்கங்கள் 65B–2 ஆம் எண்ணுள்ள நி.அ. புலத்தின் தெற்கு, கிழக்கு மற்றும் வடக்குப் பக்கங்கள் நெடுகிலும் சென்று, பின்னர் 375, 374 மற்றும் 373 ஆம் எண்களுள்ள நி.அ. புலங்களின் கிழக்குப்பக்கம் நெடுக்கிலும் சென்று, தொடங்கிய இடத்தை அடைகிறது.

**III. கோடியக்காடு காப்புவனத்தின் நாற்புற எல்லைகள் பற்றிய விவரம்**

*வடக்கு: மற்றும் கிழக்கு:* எண் 133–1 கோடியக்காடு கிராமத்தின் 169 மற்றும் 170 ஆம் எண்களுள்ள நி.அ. புலங்களின் முச்சந்திப்பிலிருந்து தமிழ்நாடு 1882 ஆம் ஆண்டு வனச்சட்டத்தின் 16 ஆம் பிரிவின் கீழ் அறிவிக்கையிடப்பட்ட கோடியக்காடு காப்பு வனம் 16–6–1986 ஆம் நாளிட்ட 23013/FR III/86 ஆம் எண்ணுள்ள அரசுக் கடிதத்தில் ஒப்புதலளிக்கப்பட்டது.) தெற்கு எல்லை நெடுக கிழக்காகச் சென்று, பின்னர், கோடியக்காடு காப்புவனத்தின் தெற்கு எல்லை 58 ஆம் எண்ணுள்ள கோடியக்கரை கிராமத்தின் தெற்கு எல்லை 317–2 ஆம் எண்ணுள்ள நி.அ. புலத்தின் மேற்கு, தெற்கு மற்றும் கிழக்குப் பக்கங்கள் ஆகியவை நெடுகத் தொடர்ந்து கிழக்காகவும் சென்று, மீண்டும் 58 ஆம் எண்ணுள்ள நி.அ. புலத்தின் தெற்கு எல்லை நெடுகவும் சென்று, 133–1 ஆம் எண்ணுள்ள கோடியக்கரை கிராமத்தின் 351 ஆம் எண்ணுள்ள நி.அ. புலத்தின் தென்கிழக்கு மூலையில் வங்காள விரிகுடாவை அடைகிறது.

*தெற்கு:*

பின்னர், இந்த எல்லைக்கோடு வங்காள விரிகுடா மற்றும் எண் 133–1 கோடியக்கரை கிராமத்தின் 351, 350, 349, 348, 347, 346, 345, 344, 343, 342, 341, 340, 339, 264, 263, 262, 260, 205, 204, 203, 202, 201, 190, 189, 177 மற்றும் 176 ஆம் எண்களுள்ள நி.அ.புலங்களின் தெற்கு எல்லைகள் ஆகியவை நெடுக 22,510 லிங்குகள் நீளத்திற்கு மேற்கு நோக்கிச் சென்று 79,176 ஆகிய நி.அ. புலங்கள் மற்றும் வங்காள விரிகுடா ஆகியவற்றின் முச்சந்திப்பை அடைகிறது.

*மேற்கு:*

பின்னர், இந்த எல்லைக்கோடு 79 ஆம் எண்ணுள்ள நி.அ. புலத்தின் கிழக்கு மற்றும் வடக்குப் பக்கங்கள் 80,81,165, 166, 167 மற்றும் 169 ஆம் எண்களுள்ள நி.அ. புலங்களின் கிழக்குப்பக்கங்கள் ஆகியவை நெடுக வடக்காகச் சென்று, தொடங்கிய இடத்தை அடைகிறது.

**மோகன் வர்கீஸ் சுங்கத்,**
*அரசு கூடுதல் தலைமைச்செயலாளர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி மற்றும்*
*செய்தி (மொழிப்பெயர்ப்புத்) துறை.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால்
அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.